(இ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின்போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல் சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டர் வண்டிகள்) வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின் போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்." (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: You can record your objection பிறகு ஆய்வுக்கு வரும்பொழுது எடுத்துக்கொள்ளலாம். எனவே, அதைமட்டும் சொல்லுங்கள்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு வார்த்தைதான். இந்தச் சட்ட முன் வடிவு தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையைப் பறிக்கக் கூடியதாக இருக்கின்ற காரணத்தினாலே இதை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவரவர்களே' தோற்றத்தில் மக்களின் நலனுக்காக என்றாலும்கூட, உள்ளடக்கத்தில் ஜனநாயக விரோதமான இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிற ஆரம்ப நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆட்சேபிக்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

திரு. எஸ். ரெத்தினராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

" 1987 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வேலை நிறுத்தம் அல்லது ஆர்ப்பாட்டம் அல்லது கண்டனத்தின் போது வேண்டுமென்றே போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றமைக்காக ஊர்தியோட்டும் உரிமங்களை நீக்கம் (ரத்து) செய்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(சு) திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களை கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தினுடைய கருத்திலே எனக்கு உடன்பாடு இருந்தாலும்கூட, தணிக்கை என்பது மத்திய பாராளுமன்றத்தினுடைய அதிகார வரம்புக்கு உட்பட்ட காரணத்தினாலே இதில் தமிழக சட்டமன்றத்திற்கு உரிமையிருக்கிறதா என்ற சட்டப்பிரச்சினை காரணமாக இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மைய அரசின் அனுமதியை எதிர்பார்த்துத்தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

திரு. அ. மலர்மன்னன்: தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவினை நான் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

'' தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு திரைப்படங்கள் தொடர்பான விளம்பரங்களை கட்டாயமாகத் தணிக்கை செய்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.